| | | | | |
|---|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.4/2022 | | வா. சா .1 | தேதி.08.02.2023 | |
| பெயர் | திரு. ராமசாமி | | வயது | 46 |
| த/பெ. | திரு.காரைய்ய கவுடர் | | முகவரி | 5/26, கே.புங்கம்பாளையம், காரமடை, மருதூர் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | | | |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. எனக்கு 65 வயதாகிறது. எனது அம்மா பெயர் காளம்மாள். என் அம்மா எப்போது இறந்தார் என்றால் நான் ஒரு வயது குழந்தையாக இருக்கும்போதே இறந்துவிட்டார். என் அம்மாவுடன் பிறந்தவர்கள் என் அம்மாவையும் சேர்த்து நான்கு பேர். என் அம்மா பெயர் காளம்மாள், என் அம்மாவின் தங்கை பெயர் ரங்கம்மாள், என் அம்மாவின் அக்கா பெயர் சுப்பம்மாள், என் அம்மாவின் அண்ணன் பெயர் காளப்ப கவுண்டர். எனது அம்மாவின் அக்கா சுப்பம்மாள் இறந்தது எனக்கு தெரியும், அவர் 2007 ல் இறந்தார். மற்றவர்கள் இறந்தது எனக்கு தெரியாது. மூன்று ஐய்ட்ட சொத்துகளை நான் காண்பித்துள்ளேன். எனக்கு சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், 85/1, 86, 85/1. ஒவ்வொரு ஐய்ட்டத்திலும் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் ஒரு ஐய்ட்டத்தில் 7 ஏக்கர் 20 செண்ட் நிலமும், மற்றொரு ஐய்ட்டத்தில் 3 ஏக்கர் 92 செண்ட் நிலமும், சொத்துக்களின் செக்கு பந்தி எனக்கு தெரியாது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் வழக்கு நடத்துகிறோம். எல்லோருக்கும் சேர்த்தி தான் சாட்சி சொல்கிறேன்.

2. எனது தாயாரோ, எனது தாயாரின் சகோதரிகளோ இந்த சொத்தில் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இருந்ததில்ரலை என்றால் நான் சின்ன குழந்தை அதனால் தெரியாது. முதலில் இருந்துள்ளார்கள். முதலில் அவர்களும் சுவாதீனத்தில் இருந்ததாக என் பெரியம்மா சுப்பம்மாள் சொல்லி எனக்கு தெரியும். சுப்பம்மாளுக்கு குழந்தைகளே கிடையாது. ரங்கம்மாளுக்கு சரஸ்வதி என்ற மகள் உள்ளார்,. சரஸ்வதி இன்று உடம்பு சரியில்லாததால் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அவருக்காகவும் சேர்த்து தான் நான் வழக்கு நடத்துகிறேன். வழக்கு சொத்தில் தற்போது யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் யாரும் விவசாயம் செய்யவில்லை. சும்மா தான் கிடக்கிறது. சொத்தில் கிணறு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அதில் வீடு உள்ளதா , போர்வெல் உள்ளதா, குடியிருக்கிறார்களா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த நிலத்திற்கு நான் தற்போது போனதில்லை, 20 வருடத்திற்கு முன்பாக போயிருக்கிறேன்.

3. நான் அந்த நிலத்திற்கு போனதே இல்லை என்றும், அதனால் தான் அந்த நிலம் குறித்து எனக்கு எதுவும் தெரியவில்லை என்றால் நான் தற்போது போனதில்லை என்பது உண்மை தான். நானும் , சரஸ்வதியும் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், அதனால் நான் வழக்கிற்கு கட்டிய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும், அதனால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்க சொத்திற்கு பட்டா யார் பெயர் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. ( 1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் மேலும் குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் வேண்டப்பட்டதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-P.K.Sivakumar**
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.